

ஈரோடு மாவட்டம், பெருந்துறை, தச்சங்கரை வழி இருச முதலியார் குல கூட்டத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிராம ஊராட்சிகளில் குப்பைகள் சேகரிக்கும் (Ecard) மின்கல வாகனங்களை வழங்கினார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



தஞ்சை மத்திய மாவட்டம், திருவையாறு நகராட்சியில் நடைபெற்ற ‘‘உங்களுடன் ஸ்டாலின்” முகாமில் பயனாளிகளுக்கு மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கினர். உடன் நகராட்சி செயலாளர் சி.நாகராஜன், சி.தண்டபாணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.

## தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

# தினை வகைகள் மூலம் பேக்கரிப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி!

சென்னை, ஆக. 30 -

தமிழ்நாடு அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், 3 நாட்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் தினை வகைகள் கொண்டு பேக்கரி பொருட்கள் தயாரித்தல் பயிற்சி வரும் 9.9.2025 முதல் 11.9.2025 தேதி வரை காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் பேக்கரி பொருட்களின் கோதுமை வெண்ணெய் பிஸ்கட், தினை பால் பிஸ்கட், தினை ஜீரா குக்கீ, செரிமான குக்கீகள், ராகி நட்ஸ் குக்கீகள், மல்டிமில்லட் குக்கீகள், சோளம் சாக்லேட் பிஸ்கட், கம்பு நெய் பிஸ்கட், கருப்பு கவுனி பாதாம் குக்கீ, தினை ஓமம் பிரவுன் குக்கீ, பிரவுன் ஓமம் பிரவுன் குக்கீ, ராகி, சாமாமில் பிரவுன் குக்கீ ஃபட்ஜி பிரவுனி, கருப்பு கவுனி பிரவுனி, டபுள் சாக்லேட் பிரவுனி, கோதுமை வெண்ணிலா பஞ்சு, ராகி சாக்லேட் கேக், தினை வாழை கேக், சோளம் கேரட் இலவங்கப்பட்டை கேக், முழு கோதுமை ரொட்டி, ராகி தினை ரொட்டி, மல்டிமில்லட் ரொட்டி, பால் ரொட்டி வகைகள் எப்படி தயாரிப்பது பற்றி இப்பயிற்சியில் விளக்குவார்கள். மேலும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் ஆகியவையும் விளக்கப்படும்.

இப்பயிற்சியில் ஆர்வமுள்ள தொழில்முனைவோர் (ஆண்/பெண்) 18 வயதுக்கு மேற்பட்ட குறைந்தபட்சகல்வித்தகுதி 10வது வகுப்புடன் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சியில் பங்குபெறும் பயனாளிகளுக்கு குறைந்த வாடகையில் தங்கும் விடுதி உள்ளது தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் WWW.EDITN.IN என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600 032. 8668102600 / 7010143022. முன்பதிவு அவசியம்: அரசு சான்றிதழ் வழங்கப்படும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட சிறப்பு முகாம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பங்கேற்பு!

புதுக்கோட்டை.ஆக30

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், வல்லவாரி ஊராட்சியில் உள்ள ஸ்ரீ மஹாலில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட சிறப்பு முகாமில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் , மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 28.08.2025 அன்று பொதுமக்களிடம் விண்ணப்பங்களை பெற்றுகொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள். அந்தவகையில், முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள கடைகோடி மக்கள், அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள்/ திட்டங்களை, அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும், “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்கள்.

“உங்களுடன்ஸ்டாலின்” திட்டத்தின் கீழான, முகாம்களில் நகர்ப்புறப் பகுதிகளில் 13 அரசுத் துறைகளின் 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 அரசுத் துறைகளின் 46 சேவைகளும் வழங்கப்படும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்களின் மீது, உடனடியாகத் தீர்வு கிடைக்கக்கூடிய இனங்களில் உடனடியாகத் தீர்வு காணப்படும். பிற இனங்களில் அதிகபட்சமாக 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும். அதன்படி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், வல்லவாரி ஊராட்சியில் உள்ள ஸ்ரீ மஹாலில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட சிறப்பு முகாமில் கலந்துகொண்டு, மக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்கள் கேட்டறிந்தார்.

அதனடிப்படையில் இம்முகாமானது, புதுக்கோட்டை மாவட்டத்தில், மாநகராட்சி பகுதியில் 29 முகாம்களும், அறந்தாங்கி நகராட்சி பகுதியில் 10 முகாம்களும், பேரூராட்சி பகுதிகளில் தலா இரண்டு வீதம் 16 முகாம்களும், ஊராட்சி பகுதிகளில் 151 முகாம்களும், பெரிய நகரங்களில் 7 முகாம்களும் ஆக மொத்தம் 213 முகாம்கள் 15.07.2025 முதல் 21.10.2025 வரை நடத்தப்பட உள்ளன.

எனவே, தமிழக அரசின் மூலம் பொதுமக்களின் நலனிற்காக செயல்படுத்தப்படும் இதுபோன்ற திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்தி, தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இம்முகாமில், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜி.அமீர்பாஷா, அறந்தாங்கி வட்டாட்சியர் க.கருப்பையா, சண்முகநாதன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## சென்னையில் வசிக்கும் பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில்

# இளஞ்சிவப்பு ஆட்டோக்கள் பெற பெண்கள் விண்ணப்பித்திடுவீர்!

## தமிழ்நாடு அரசு சமூக நலத் துறை அறிவிப்பு!

சென்னை, ஆக. 30 -

பெண்களின் பாதுகாப்பு மற்றும் மகளிர்க்கு அதிகாரம் அளித்தலுக்கான பல முன்னெடுப்பு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்திவருகிறது. தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் ஒரு புதிய முயற்சியாக, சென்னை மாநகரில் 250 பெண் ஆட்டோ ஓட்டுனர்களுக்கு தொழில்வாய்ப்பு ஏற்படுத்துவதுடன் பெண்களின் பாதுகாப்பான பயணத்தையும் உறுதிசெய்திடும் பொருட்டு “இளஞ்சிவப்பு ஆட்டோக்கள்” வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது.

பெண்கள் சுய தொழிலில் சிறந்து விளங்க ஊக்கப்படுத்தவும், ஓட்டுநர் உரிமம் பெற்ற பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் இத்திட்டம் வழிவகை செய்யும். ஒவ்வொரு இளஞ்சிவப்பு ஆட்டோவிலும், பெண்களின் பாதுகாப்பிற்காக காவல்துறை உதவி எண்களுடன் இணைக்கப்பட்ட GPS பொருத்தப்பட்டிருக்கும். இது அவசர காலங்களில் புகார் பெறப்பட்டவுடன், காவல் துறையின் மூலம் விரைவான நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்யும். இளஞ்சிவப்பு ஆட்டோ பெறும் பயனாளிகளுக்கு கட்டணங்கள் ஏதுமின்றி (COMMISSION) “ஊர் கேப்ஸ்”செயலிபயன்படுத்த வழிவகை செய்து தரப்படும்.

சென்னை மாநகரில் 250 இளஞ்சிவப்பு CNG ஆட்டோக்கள் இயக்க விண்ணப்பங்கள் பெறப்பட்டு முதல்கட்டமாக தகுதியான பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சர்வதேச மகளிர் தினமான 08.03.2025 அன்று இளஞ்சிவப்பு ஆட்டோக்களை மகளிருக்கு வழங்கி இத்திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

இதனை தொடர்ந்து CNG ஆட்டோக்கள் மூன்றாம் கட்டமாக வழங்கப்பட வுள்ளதால் தகுதியான பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறும் பொருட்டு இத்திட்டத்தின் கீழ் பயன்பெற 15.09.2025 தேதிவரை விண்ணப்பங்கள் கீழ் கண்ட நிபந்தனைகளுடன் வரவேற்கப்படுகின்றன.

I. பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

II. கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

III. 20 வயது முதல் 45 வயதிற்குள் இருக்க வேண்டும்.

IV. ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.

V. சென்னையில் குடியிருக்க வேண்டும்.

எனவே, சென்னையில் உள்ள ஆட்டோ ஓட்ட விருப்பமுடைய பெண் ஓட்டுனர்கள், இத்திட்டத்தின் கீழ் பயனடைய பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தை சென்னை 600 001. சிங்காரவேலர் மாளிகை, 8-ஆவது தளத்தில் செயல்படும் சென்னை மாவட்ட சமூக நல அலுவலர் (வடக்கு) அல்லது சென்னை மாவட்ட சமூக நல அலுவலர் (தெற்கு) என்ற முகவரியிட்டு 15-09-2025 தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

இவ்வாறு சமூக நலத் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜ் அறிக்கை!

நீலகிரி, ஆக.30–

நீலகிரி மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் கே.எம்.ராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுகூட்டம் 1.9.2025 திங்கட்கிழமை காலை 11 மணி அளவில் மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.போஜன் அவர்கள் தலைமையில், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், கழக தேர்தல் பணி செயலாளர், அரசு தலைமைக் கொறடா கா.ராமசந்திரன் ஆகியோர் முன்னிலையில் மாவட்டக் கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக செயற்குழு–பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.



பொருள்: கழக ஆக்கப் பணிகள்.

செப்டம்பர் – 15, கழக முப்பெரும் விழா நிகழ்ச்சிகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திராவிட நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நகர்ப்புற அரசு உதவிபெறும் பள்ளிகளில் காலை உணவுத்திட்டத்தினை துவங்கிவைத்ததை தொடர்ந்து திருவாரூர் ஆர்.சி.பாத்திமா அரசு உதவிபெறும் நடுநிலைப்பள்ளியில் காலை உணவுத்திட்டத்தினை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் துவக்கி வைத்தார்.மாவட்ட ஆட்சியர் மோகன சந்திரன் , வை.செல்வராஜ் எம்.பி. , நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ், நகர்மன்ற தலைவர் புவனபிரியாசெந்தில், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் கலந்துகொண்டனர்.



ஈரோடு நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் சட்டமன்ற தொகுதி, பள்ளிபாளையம் அக்ராஹாரம் ஊராட்சியில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் கே.எஸ். முர்த்தி தலைமையில் AGMAT 2025–2026 திட்டத்தின்கீழ் மலைக்காடு பகுதியில் ரூ.9.60 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட கான்கிரீட் சாலை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் திறந்து வைத்து மலைக்காடு பகுதியில் ரூ.31.29 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச்சாலை அமைக்கும் பணியினை துவக்கி வைத்தார். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.வெங்கடாசலம், மத்திய ஒன்றியப் பொறுப்பாளர் தளபதி ஆர்.செல்வம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.